**எஸ்.டி.சி.எண். 990/2023 நாள்- 21.03.2024 பக்கம் /2023**

**ம.சா .1 முத்துசுப்பிரமணியன் த/பெ.ஜி.லட்சுமிநாராயணன்**

**எதிரி ஆஜர்.**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம் படித்துள்ளேன். என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் 35 வருடங்களாக பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். 18 வருடங்களாக அலுவலகமாக வைத்து பைனான்ஸ் தொழில்செய்து வந்தேன். தற்போது தெரிந்தவர்களுக்கு மட்டும் கடன் கேட்பவர்களுக்கு மட்டும் கொடுத்து வருகிறேன். பைனான்ஸ் தொழில் கடன் கொடுக்கும்போது என்ன என்ன ஆவணங்கள் வாங்கவேண்டும் என்ற விதிமுறைகள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும்.

2) இந்த வழக்கின் எதிரி வெங்கடேசை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 15 வருடங்களாக தெரியும். பிரபு என்ற எல்.ஐ.சி. ஏஜண்ட்டிடம் எதிரி வெங்கடேஷ் பணிபுரிந்து வந்தார், மேற்படி எல்.ஐ.சி.பிரபு எ ன்பவருக்கும், எனக்கும் வரவு செலவு இருந்தது, அதற்காக அவரது அலுவலகத்திற்கு சென்று வந்த வகையில் மேற்படி எதிரி வெங்கடேஷ் எனக்கு பழக்கமானார். அது மட்டுமல்லாமல் எதிரி வெங்கடேஷ் பிரபு என்பவர் சார்பாக எனது அலுவலகத்திற்கு அடிக்கடி வருவார்.

3) மேற்படி எதிரி வெங்கடேஷ் பிரபு அலுவலகத்தில் என்னவாக பணிபுரிந்து வந்தார் என்றால், கிளர்க்கா, மேனேஜரா என்று எனக்கு தெரியாது. குறிப்பாக என்ன பணிபுரிந்து வந்தார் என்று தெரியாது, ஆனால் பணிபுரிந்து வந்தார். எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலோ எதிரி பிரபு அலுவலகத்தில் பணிபுரிந்து வந்ததன் மூலம் எனக்கு பழக்கமானார் என்ற

விவரத்தை கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. எதிரி எத்தனை ஆண்டுகள் பிரபுவின் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தார் என்றால், 4,5 ஆண்டுகள் பணிபுரிந்து விட்டு, பின்னிட்டு வெளியில் தனியாக வந்து தொழில் செய்தார், முதலில்வேலாயுதம்பாளையத்தில் பைனான்ஸ் தொழில் செய்வதாக எதிரி என்னிடம் கூறினார், எனக்கு நேரடியாக தெரியாது.

4) அதன் பின்பு ஸ்டேஷனரி மெர்ச்சண்ட் வெங்கமேட்டில்வைத்திருந்தார், எந்த வருடம் வைத்திருந்தார் என்று தெரியாது, ஞாபகம் இல்லை, தற்போது அந்த கடையும் இல்லை. நிறைய இடத்தில் கடன் வாங்கியிருந்ததால் மேற்படி கடையை நடத்தவில்லை என்று என்னிடம் கூறினார். எந்த வருடம் என்னிடம் கூறினார் என்றால், இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தான் என்னிடம் கடன் வாங்குவதற்கு முன்னிட்டுத்தான் கூறினார்.

5) வெங்கடேஷின் குடும்ப உறுப்பினர்களைப் பற்றி தெரியுமா என்றால் எதிரிக்கு மனைவி, தாயார், ஒரு மகள் உள்ளார், அவரது தந்தை பற்றிய விவரமோ, வேறு குழந்தைகள் உள்ளதா என்ற விவரம் எனக்குத் தெரியாது. அவர் சொந்த வீட்டில் உள்ளாரா அல்லது வாடகை வீட்டில் உள்ளாரா என்றால் சொந்த வீட்டில் உள்ளதாகத்தான் என்னிடம் கூறினார். மேற்படி விவரங்களின் உண்மை தன்மையை தெரிந்து கொள்ள நான் முயற்சிக்கவில்லை என்றால் சரிதான்.

6) எதிரியின் தந்தை பெயர் என்ன என்றால் தங்கவேல் என்று கூறியதாக ஞாபகம். எனக்கு சரியாக தெரியாது. எதிரிக்கு நான் அனுப்பிய அறிவிப்பு ம.சா.ஆ.3-ல் எதிரியின் தந்தை பெயர் தியாகராஜன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள புகாரிலும் எதிரியின் தந்தை பெயர் தியாகராஜன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரி ஆஜரான

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

பின்னிட்டு தனது தந்தை பெயர் தவறாக உள்ளதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

7) மேற்படி குறிப்பாணையில் எதிரியின் தந்தை பெயர் தங்கராஜ் என்று குறிப்பிட்டு தாக்கல் செய்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். அதன் பிறகு நான் எதிரியின் அப்பா பெயர் தங்கவேல் என்று குறிப்பிட்டு திருத்தப்பட்ட புகார் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**Sd/-R.Sujatha**
நீதித்துறை நடுவர் எண்.2
கரூர்